பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
17 02 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் உலக தரத்திலான ஜவுளி உற்பத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு 11 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.
- அதிக எடை உள்ள ராக்கெட் மோட்டார்களில் பயன்படுத்துவதற்கான உலகின் மிகப்பெரிய பத்து டன் உந்து சக்தி எந்திரத்தை உருவாக்கி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.
- தில்லியில் ஏற்பட்ட நிலநடுக்கம் குறித்து மக்கள் அச்சமடைய வேண்டாம் என்றும், பாதுகாப்புடன் இருக்குமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.
- மகளிர் பிரிமியர் லீக் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஆடை வடிவமைப்புத்துறையில் சுற்றுச்சூழலையும் அதிகாரத்தையும் உறுதி செய்ய வேண்டுமென்ற உலகளாவிய தொலைநோக்கு பார்வையை இந்தியா முன்னெடுத்துச் செல்லும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பாரத் டெக்ஸ்-2025 ஜவுளி கண்காட்சியில் உரையாற்றிய பிரதமர், இந்தியாவில் பாரம்பரிய ஜவுளி உற்பத்தி ஏழை எளிய நெசவாளர்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் கைத்தறி மூலம் உருவாக்கித் தரும் துணி ரகங்கள் உலகளாவிய தொலைநோக்கு பார்வையை உறுதி செய்திருப்பதாகக் கூறினார்.

கதர் ரகங்கள், பழங்குடியின மக்களின் ஜவுளி ரகங்கள் மற்றும் இயற்கையான பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் சாய வகைகளின் பயன்பாடு ஆகியவை சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பாரம்பரிய, நிலையான, ஜவுளி தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்த பிரதமர், விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் கைவினை தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏராளமான மக்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் ஜவுளி ஏற்றுமதியை ஒன்பது லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜவுளி மற்றும் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி எழு சதவீதம் உயர்ந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகிலேயே கைவினைப் பொருட்கள் எற்றுமதியில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

உலக தரத்திலான கார்பன் நார் இழையை உற்பத்தி செய்வதற்கான முயற்சியை இந்தியா எடுத்து வருவதாக தெரிவித்த பிரதமர், ஜவுளித்துறையில் திறன்மிக்க நிபுணர்கள் மற்றும் பணியாளர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இயற்கை நார் இழைகளை உற்பத்தி செய்யும் பண்ணைகளிலிருந்து ஆடை வடிவமைப்பு ஏற்றுமதி வரை விரிவாக்கம் செய்வதற்கான பணிகளை ஒரு இயக்கமாகவே இந்தியா நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா கொண்டு வந்துள்ள பாரத் டெக்ஸ் தளம் உலகளாவிய ஜவுளி உற்பத்தியாளர்கள் பங்கேற்பதற்கு புதிய வாய்ப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் பாரம்பரியமிக்க பன்முக கலாச்சாரம் பல வடிவங்களில் ஜவுளி உற்பத்தியை மேம்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

பாரம்பரிய கதர் ஆடைகளை உடுத்த வேண்டும் என்ற சிந்தனையை மக்களிடையே சுதந்திரப் போராட்டக் காலத்தில் முழக்கமாக எதிரொலித்ததாகவும், ஆனால் தற்போது கதர் ஆடையின் மகத்துவத்தை உலகிற்குச் சொல்லும் நாடாக இந்தியா செயலாற்றி வருவதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவீத்தார்.

[]<<<>>>[]

தலைநகர் தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று அதிகாலை ஏற்பட்ட லேசான நிலநடுக்கம் குறித்து பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் பொதுமக்கள் அமைதி காத்து அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் கடைபிடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

தில்லி, நொய்டா, இந்திராபுரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் இன்று அதிகாலை 5-36 மணி அளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் நான்காக பதிவானது.

பீகார் மாநிலத்தில் சிவான் மாவட்டத்திலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இதனையடுத்து மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறினர்.

இதனால் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை.

**[]<<<>>>[]**

அதிக எடை உள்ள ராக்கெட் மோட்டார்களில் பயன்படுத்துவதற்கான உலகின் மிகப்பெரிய பத்து டன் உந்து சக்திக்கான எந்திரத்தை இஸ்ரோ உருவாக்கி சாதனை படைத்துள்ளது.

பெங்களூருவில் உள்ள மத்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்துடன் இணைந்து இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையம் இந்த நவீன உந்து சக்தி கட்டமைப்பை வடிவமைத்துள்ளது.

ராக்கெட்டை அதிவேகத்தில் செலுத்துவதற்கான எரிபொருட்களை அதிக அளவில் சரியான விகிதத்தில் கலந்து தரும் பணியை இந்த கட்டமைப்பு மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி துறையில் சுயசார்பு இந்தியா இயக்கத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள இந்த நவீன தொழில்நுட்பம், நாட்டின் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் மைல் கல்லாக விளங்குகிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு 11 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாகவும், இதன்மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இன்று தரிசனம் செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசு தமிழகத்தில் மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களையும் பட்டியலிட்டார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் - 1 ) -52---- செகண்ட்*

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை இளைஞர்களை உலக அளவிலான போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்துவதற்கான கருவியாக அமைந்துள்ளது என்றும் திரு எல் முருகன் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் -2 ) 58 செகண்ட்*

[]<<<>>>[]

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

*(சவுண்ட் பைட் - சாங் - 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா தொடங்கியதில் இருந்து இதுவரை 52 கோடியே 96 லட்சத்திற்கும் அதிகமானோர் புனிதா நீராடி இருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதியநாத் தெரிவித்துள்ளார்.

கும்பமேளாவில் பங்கேற்கும் பக்தர்கள் அனைவரும் தூய்மையைக் கடைபிடிப்பதுடன், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே பிரயாக்ராஜ் செல்லும் பக்தர்களின் வசதிக்காக புதுதில்லியில் இருந்து இன்று மேலும் 5 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அத்துடன் புதுதில்லி ரயில் நிலையத்தில் இருந்து பிரயாக்ராஜ் செல்லும் ரயில்கள் அனைத்தும் 16-ஆம் எண் நடைமேடையில் இருந்து இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் அனைவரும் ரயில் நிலையத்திற்கு வருவதற்கும், வெளியேறுவதற்கும் அஜ்மீரி கேட் நுழைவு வாயிலைப் பயன்படுத்துமாறும் ரயில்வே கேட்டுக்கொண்டுள்ளது.

பிரயாக்ராஜ் செல்லும் பயணிகளை ஒழுங்குபடுத்துவதற்கென புதுதில்லி ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் ரயில்வே காவல்துறையினர் கூடுதலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும்,

அவர்கள், பயணிகள் செல்ல வேண்டிய நடைமேடை குறித்து வழிகாட்டுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சவுண்ட் பைட் - சாங் - 8 நொடிகள்)

[]<<<>>>[]

கல்லீரல் வீக்கம் மற்றும் புற்றுநோய் ஏற்படுவதை காய்கறி உணவு வகைகள் 65 சதவீதம் அளவுக்கு தடுப்பதாக பிரான்ஸ் நாட்டின் சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒரு நாளைக்கு 240 கிராம் வரை காய்கறிகளை உட்கொள்ளும் ஷீரோசிஸ் பாதிப்பு நோயாளிகளுக்கு கல்லீரல் புற்றுநோய் எற்படுவது பெருமளவு குறைவதாக அந்த ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மகளிர் பிரிமியர் லீக் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]